செ.வெ.எண் -20 நாள்:12.07.2019

# அரியலூர் மாவட்டத்தில் சிறப்பு கால்நடை பாதுகாப்புத்திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், மேட்டுப்பாளையம் கிராமத்தில் கால்நடைப்பராமரிப்புத் துறையின் சார்பில் **தமிழக அரசின் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவ முகாமினை** மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் இன்று (12.07.2019) துவக்கி வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில், சிறந்த கிடேரி கன்றுகளுக்கு பரிசுகளையும்,, தாது உப்பு கலவைகளையும் வழங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் மொத்தம் 44 கால்நடை மருந்தகங்கள், 2 கால்நடை மருத்துவமனைகளும், 7 கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகிறது.

கால்நடைகள் வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, பல்வேறு முகாம்கள் நடத்தப்பட்ட வருகிறது. அவற்றில் கால்நடைகளில் சிறப்பாக வளர்க்கப்பட்ட கிடேரி கன்றுகளுக்கு பேரணி நடத்தப்பட்டு, சிறந்த கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மேலும், இம்முகாமில் 2238 கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் கொண்டுவரப்பட்டன. இதன் மூலம் 238 பனாளிகளின் கால்நடைகள் பயனடைந்துள்ளன.

கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவ முகாம் அனைத்து கிராமங்களிலும் நடைபெறவுள்ளது. இந்த முகாமில், கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சை அளித்தல், உறை விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல், ஆண்மை நீக்கம் செய்தல், அனைத்து கால்நடைகளுக்கும் குடற்ப்புழு நீக்கம் செய்தல், நுண்ணலை நுண்ணாய்வுக் கருவி (Ultrasound Scanner) மூலம் சினை பரிசோதனை மற்றும் இதர பரிசோதனைகள் செய்தல், மலடு நீக்க சிகிச்சை அளித்தல், கால்நடைகளுக்கு சுண்டுவாத அறுவை சிகிச்சை, கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுதல், கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய் தடுப்பூசி போடுதல் போன்ற பணிகள் இலவசமாக வழங்கப்படும் என்பதால் சுற்றுப்புற கிராம விவசாய பெருங்குடி மக்கள் தங்கள் கால்நடை செல்வங்களை திரளாக கொண்டு வந்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், கால்நடைப்பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ஹமீது அலி, உதவி கால்நடை இயக்குநர் செல்வராஜ், கால்நடை உதவி கால்நடை மருத்துவர் அலுவலர்கள் குமார், வேல்முருகன், ராஜா, முத்துசெல்வன், அஜந்தா மற்றும் ஆவின் உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமாப்பு உதவியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**